

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–3 க்கு உட்பட்ட காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 03-02-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025



தமிழ்நாட்டில் குறைந்த வட்டி விகிதத்தில் அதிநவீன

# மின் உள்கட்டமைப்பை உருவாக்க போதுமான நிதி உதவி வழங்கிட வேண்டும்!

## நாடாளுமன்றத்தில் இரா. கிரிராஜன் எம்.பி. பேச்சு!

புதுடெல்லி, பிப்.6 -

தமிழ்நாட்டில் குறைந்த வட்டி விகிதத்தில் அதிநவீன மின் உள்கட்டமைப்பை உருவாக்க போதுமான நிதி உதவி வழங்கவும் மின் உற்பத்தி மற்றும் மேம்பாட்டு இழப்புகளைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாடாளுமன்றத்தில் இரா.கிரிராஜன் வலியுறுத்தி பேசினார்.

மாநிலங்களவையில் கழக உறுப்பினர் இரா.கிரிராஜன் பேசியதாவது:-



கோடை காலத்தில் தமிழ்நாட்டின் உச்ச மின்சார தேவை 22,000 மெகாவாட்டைத் தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில் ஏற்பட்ட ஃபெஞ்சல் புயலின் போது, மொத்தம் 12,265 மின்கம்பங்கள் சேதமடைந்தன, ஆனால் அவை குறிப்பிட்ட நேரத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அதிவேக நடவடிக்கைகளால் மாற்றப்பட்டன. கோடைக்கு முன்னதாக, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய அதிகாரிகள் மாநிலம் முழுவதும் உள்ள 6,536 மின்மாற்றிகளில் அதிக சுமை சிக்கல்களைக் கண்டறிந்துள்ளனர், அவற்றில் 5,407 ஏற்கனவே சரி செய்யப்பட்டுள்ளன. தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக மாநிலம் முழுவதும் 20 மின் துணை மின் நிலையங்களை இயக்குவதற்கான திட்டத்துடன், மின் கட்டமைப்பை வலுப்படுத்த 48 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

தென்னக பிராந்திய மின் குழுவின் (SRPC) சுமை உற்பத்தி இருப்பு அறிக்கை (LGBR) படி, ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாட்டின் உச்ச மின் தேவை 20,600 மெகாவாட்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 21,488 மெகாவாட் கிடைக்கும் நிலையில், இதன் விளைவாக 985 மெகாவாட் உபரியாக இருக்கும். ஆனால், மாலையில் 16,003 மெகாவாட் கிடைக்கும் நிலையில் தேவை 20,700 மெகாவாட்டாக இருக்கும், இதனால் 4,697 மெகாவாட் பற்றாக்குறை ஏற்படும்.

இந்திய பொருளாதார ஆய்வறிக்கை 2021ன்படி இந்தியாவின் மின் உற்பத்தி இழப்புகள் உற்பத்தியில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளன, இது உலக சராசரியை விட இரண்டு மடங்கு அதிகமாகும். அரசு மின் விநியோக இழப்புகளைக் குறைத்தால் மட்டுமே மின் விநியோகம் பிரகாசமாக இருக்கும்.

தமிழ்நாடு நாட்டின் முன்னணி தொழில்துறை மாநிலங்களில் ஒன்றாகும், மேலும் அதன் மின்சார விநியோகம் மற்றும் தேவையும் அதிகமாக உள்ளது, மேலும் தனிநபர் நுகர்வும் அதிகமாக உள்ளது. எனவே, மத்திய அரசு மின் உற்பத்தி வழித்தட செயலில் ஏற்படும் இழப்புகளைக் (Transmission and Distribution) குறைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் அதிநவீன மின்சார உள்கட்டமைப்பை உருவாக்க போதுமான நிதியுதவியை குறைந்த வட்டியில் வழங்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் ஒன்றிய அரசை வலியுறுத்தி பேசினார்.

# தொழிலாளர் விரோத அரசாகச் செயல்படுகிறது புதுச்சேரி அரசு!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தாக்கு!

புதுச்சேரி, பிப். 6-

புதுச்சேரி மாநில உழைக்கும் மக்கள் கூட்டமைப்பு சார்பில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு, குறைந்தபட்ச கூலி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கருத்துப் பரப்புரை விளக்கக் கூட்டம் நேற்று புதுவை தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சுமதி தலைமை தாங்கினார். தேசிய துணைத் தலைவர் எல்.ஏ. சாமி முன்னிலை வகித்தார். பீம்சேனா பொதுச் செயலர் எம்.பகிரதன் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில், புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.



வேலூர் வேலப்பாடி வி.கே.விநாயகர் முதலியார் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா மற்றும் புது கட்டிடத்திற்கான அடிக்கல்நாட்டு விழாவில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டார். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மண்டல குழுத்தலைவர் யூசுப்கான், பகுதி செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தரவிஜி, பாலமுரளி கிருஷ்ணன் மாமன்ற உறுப்பினர்கள் காசு.சண்முகம், அஸ்மிதாகோபி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநில உழைக்கும் மக்கள் கூட்டமைப்பு சார்பில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு, குறைந்தபட்ச கூலி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கருத்துப் பரப்புரை விளக்கக் கூட்டம் புதுவை தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா சிறப்புரையாற்றினார்.

அப்போது, புதுச்சேரி அரசு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு எதிராக செயல்படுகிறது. தமிழகத்தில் இருபதுக்கும் மேற்பட்ட நலவாரியங்கள் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் நிலையில், புதுச்சேரியில் செயல்படும் ஒரே ஒரு அமைப்புசாரா நலவாரியத்திற்குக் கூட நிதி ஒதுக்காமல் வஞ்சிக்கிறது. குறைந்தபட்ச கூலியைக் கூட கொடுக்காமல் முடக்குகிறது. 30 ஆண்டு வேலை செய்யும் தொழிலாளர்கூட வெறும் ரூ. 12 ஆயிரம் சம்பளம் வாங்கும் அவலம் நீடிக்கிறது. முதலாளிகளுக்கு ஆதரவாக செயல்படும் புதுச்சேரி அரசு தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கிறது. புதுச்சேரியில் புதிய தொழிலும் இல்லை. வேலை வாய்ப்பும் இல்லை. மொத்தத்தில் புதுச்சேரி அரசு தொழிலாளர் விரோத அரசாக செயல்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் தேசிய காப்பீடு சட்டத்தை விரிவுபடுத்தும் விதத்தில் சட்ட திருத்தம் கொண்டுவர ஒன்றிய அரசை வலியுறுத்துவது, அனைத்து தொழிலுக்கும் குறைந்தபட்ச கூலி ரூ. 22 ஆயிரம் வழங்க வலியுறுத்துவது, அமைப்புசாரா தொழிலாளர் நலச்சங்கத்திற்கு அதிக நிதி ஒதுக்கி, நலவாரியமாக நடத்திட வேண்டும், புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நூறு நாள் வேலை திட்டத்தை முழுமையாக செயல்படுத்திட வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில், ஏ.ஐ.டி.யு.சி. தினேஷ் பொன்னையா, தொ.மு.ச. மாநில அமைப்பாளர் அண்ணா அடைக்கலம், ஏ.ஐ.சி.சி.டி.யு. புருஷோத்தமன், விஜயா, வீட்டு பணியாளர் சங்க மஞ்சுளா, விவசாய தொழிலாளர் சங்க ஐய்யனார், அமைப்பசாரா தொழிலாளர் சங்க நிர்வாகிகள் அரசம்மாள், இந்துமதி, மரகதம், துப்புரவு தொழிலாளர் சங்க நிர்வாகிகள் சரஸ்வதி, அஞ்சலை, விமலா, கட்டுமான தொழிலாளர் சங்க ராஜீவ்காந்தி, அம்பேத்கர் பேரவை திருமால், ஆர்.ஜி. பேரவை ஏழுமலை, ஜெய்பீம் இளைஞர் இயக்கம் செந்தில், பீம்சேனா ராஜாராம், ராமு, சாமிநாதன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

கூட்ட நிறைவில், கயல்விழி நன்றி கூறினார்.

செஞ்சி ஒன்றிய முன்னாள் செயலாளர்

# ரங்கநாதனின் 16 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, பிப். 6 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒன்றிய திமுக சார்பில் மறைந்த முன்னாள் செஞ்சி ஒன்றிய செயலாளர் ரங்கநாதன் அவர்களின் 16வது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி கூட்ரோட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மறைந்த முன்னாள் செஞ்சி ஒன்றிய செயலாளர் ரங்கநாதனின் திருவுருவப்படத்திற்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி மஸ்தான் முன்னிலை வகித்தார் .முன்னாள் நகர செயலாளர் காஜா நஜீர் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் அஞ்சாஞ்சேரி கணேசன், மாவட்ட கவுன்சிலர்அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வராஜ், மணிவண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட பிரதிநிதி குணசேகரன் ஒன்றிய துணை செயலாளர்கள் நாகராஜ், அனுசுயா மணிபாலன், தாட்சாயினி, அன்பு கிருஷ்ணன், விஜயா ஆளவந்தார் மாவட்ட பிரதிநிதி அனையேரி ரவி, அய்யாதுரை, அவைத் தலைவர்கள் ஆறுமுகம், வாசு, ஒன்றியவிவசாய அணி அமைப்பாளர் பெருங்காப்பூர் ராஜேந்திரன் அரசு வழக்கறிஞர்கள் கிருஷ்ணன், தமிழ்ச்செல்வி கர்ணன், நிர்வாகிகள் சங்கர், செயல் மணி, சிங்கம் சேகர், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் என்.ஆர்.பேட்டை ஊராட்சி செயலாளர் சிவக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் ராமு, பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் கார்த்திக், ஜான் பாஷா, நூர்ஜகான், ஜாபர், சீனிவாசன், மோகன், கோட்டை குமார் தொண்டரணி பாஷா, ஜே.எஸ்.சர்தார், இளைஞர் அணி அமைப்பாளர்கள் செஞ்சி கிழக்கு ஜம்போதி பழனி, மேற்கு கதிரவன், துணை அமைப்பாளர் பழனி நிர்வாகிகள் ராமு, தச்சம்பட்டு செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.வைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த் தாண்டன், துணை அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, மாநகர அமைப்பாளர் யூ.ரவிக்குமார், துணை அமைப்பாளர் முரளிபாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஜோலார்பேட்டை நா. மணி

### பிப்ரவரி 6 (2013)



வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பேரூர் செயலாளர் மற்றும் நகரச் செயலாளராக 31 ஆண்டுகள் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டார்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.